| | | |
|---|---|---|
| அ.வ.எண். | : | **934/2008** |
| தேதி | : | **27.04.2026.** |
| பெயர் | : | **பட்டம்மாள் க/பெ கன்னியப்பன்.** |

**பி.வா.த.சா.1 (DW2) அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**

**(**சாட்சியின் அடையாளம் ஆதார் அடையாள அட்டையின் மூலம் உறுதி செய்யப்பட்டது. **)**

**பி.வா.த.சா.2. (DW2) - குறுக்கு விசாரணை:**

1) நான் SSLC வரை படித்துள்ளேன். இவ்வழக்கில் நான் சாட்சியம் அளிக்க எனது தம்பி பாபு மற்றும் சித்தப்பா மகன் நாகையா ஆகியோர்களுக்கு சாதகமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க எந்த அழைப்பாணையும் வரவில்லை. எனது சத்தியப்பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் தயார் செய்தனர். தாவா சொத்தின் புல எண் எனக்கு தெரியாது.

2) தாவா சொத்தின் விஸ்தீரணம் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தின் நீள, அகலம் 42 க்கு 27 அடி ஆகும். அதன் நான்க எல்லைகள் கிழக்கு பக்கம் தேரடி தெரு, மேற்கு பக்கம் பஜனை கோவில் தெரு, தெற்கு பக்கம் திருமங்கையாழ்வார் தெரு (தோட்டக்காரத்தெரு), வடக்கு பக்கம் கௌசல்யாவின் வீடு ஆகும். தாவா சொத்தின் உட்பிரிவு விவரங்கள் எனக்கு தெரியாது.

3) தாவா சொத்திற்கு பட்டா இன்னும் வழங்கப்படவில்லை. நாகையா (2ம் பிரதிவாதி) தாவா சொத்தின் மீது எந்தவித பத்திரமும் எழுதவைக்கவில்லை. 2ம் பிரதிவாதி நாகையா ஏதேனும் பத்திரம் எழுதியிருந்தால அதனுடைய விவரங்கள் மற்றும் விஸ்தீரணங்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நாகபூஷ்ணம் எனது சித்தப்பா ஆவார். அவர் எழுதிவைத்த ஆவணங்கள் பற்றி எதுவும் எனக்கு எதுவும் தெரியாது. நாகபூஷ்ணம் என்பவர் நாகையா என்பவருக்கு எழுதிவைத்த ஆவணங்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

4) தாவா சொத்து நஞ்சையா, புஞ்சையா என்ற விவரமும் எனக்கு தெரியாது. இவ்வழக்கில் நாகையா என்பவர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியாது. நாகபூஷ்ணம் என்பவர் கிருஷ்ணமூர்த்தி என்கபவருக்கு 1962 ம் ஆண்டு எழுதிவைத்த ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியாது. கிருஷ்ணமூர்த்தி என்பவர் யார் என்று எனக்கு தெரியாது. ரங்கையா நாயுடு என்பவர் யார் என்று எனக்கு தெரியாது. ரங்கையா நாயுடு என்பவர் எழுதிவைத்த ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியாது. சாந்தி என்பவரை எனக்கு தெரியாது. சாந்தி மற்றும் கிருஷ்ணமூர்த்தி இடைய உள்ள உறவுமுறை பற்றி எனக்கு தெரியாது.

5) இந்த வழக்கின் வாதி யார் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் யார் என்றும் எனக்கு தெரியாது. நான் குடியிருந்த வீட்டிற்கு அருகில் திருப்பெரும்புதூர் ஓட்டல் ஹரிஷ் இருக்கிறது. அதன் உரிமையாளர் சேகர் என்பவர் எனக்கு தெரியும். சேகர் தாவா சொத்தை வாங்குவதற்கு முன்பாக அதன் உரிமையாளரை பற்றி என்னிடம் விசாரித்தாரா என்றால் இல்லை. தாவா சொத்தின் உரிமையாளர் யார் என்று சேகர் என்னிடம் விசாரித்தார் என்றாலும், நான் தான் அதன் உரிமையாளர் மற்றும் இதர விவரங்களை கூறிரேன் என்றாலும், அதன் அடிப்படையில் தான் சேகர் தனது தம்பியின் பெயரில் தாவா சொத்தை வாங்கினார் என்றால் சரியல்ல.

6) இவ்வழக்கின் வாதி மேற்சொன்ன சேகரின் தம்பி என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் வருவாய் துறை ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. நான் அந்த ஆவணங்களை பார்த்தது இல்லை. தாவா சொத்தின் பட்டா மற்றும் புலவரைடம் வில்லங்கசான்றிதழ், வில்லங்கங்களை ஆகியவற்றை நான் பார்த்தது இல்லை. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றும், அதில் வாதியானவர் எவ்வளவு விஸ்தீரணத்தை கிரயம் வாங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

7) சீனிவாச நாயுடு என்பவர் எனது தந்தை ஆவார். நாகபூஷ்ணம் நாயுடு என்பவர் எனது சித்தப்பா ஆவார். எனது தந்தைக்கும் எனது சித்தப்பாவுக்கும் இடையே வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டு அதன் அடிப்படையில் எல்லைகளும் பிரிக்கப்பட்டு அது வருவாய் துறை ஆவணங்களில் பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் 1 மற்றும் 2 ஆகியோர் அவர்களுடைய எதிர்வாதம் என்ன என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தின் வரி ரசீது நான் பார்த்தது இல்லை. நான் பாபு மற்றும் நாகையா ஆகியோரின் நெருங்கிய உறவு முறை என்றாலும், பாபு எனது உடன் பிறந்த சகோதரர் என்பதாலும், நாகையா எனது சித்தப்பாவின் மகன் என்பதாலும் அவர்களுக்கு ஆதரவாக தவறான விவரங்களை இந்நீதிமன்றத்தில் சாட்சியமாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சி கையொப்பம் **Sd/.** பட்டம்மாள்**.**

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/. P. Jagadeeswaran.
District Munsif,
Sriperumbudur.